# யூனியன் வங்கி ஊழியர் சங்கம் (தமிழ்நாடு)

TNBEF- AIUBEA உடன் இணைக்கப்பட்டது
சிங்கப்பூர் பிளாசா, 3வது தளம், 164, லிங்கி செட்டி தெரு, சென்னை -600 001
தொலை பேசி : 044-25358718, 9444058718 மின் அஞ்சல் : ubeutn@gmail.com


சுற்றறிக்கை எண்:133:2022 நாள்: 13.10.2022

<u>மதுரை நகர் கிளைகளுக்கு:</u>

அன்பார்ந்த தோழர்களே,

## <u>மதுரை பிராந்திய அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம்</u>

மதுரை பிராந்தியத்தில் பல கிளைகளில் நகைக்கடன் குறைந்துள்ளதால் அதற்காக மதுரை பிராந்திய அலுவலகம் நேற்று **25** நகை மதிப்பீட்டாளர் தோழர்களுக்கு இடமாற்றல் உத்தரவுகளை வழங்கி, அவர்கள் அனைவரையும் நாளை புதிய கிளையில் சேரும்படி உத்தரவிட்டுள்ளது. அவர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிவருகின்றனர். அவர்கள் வங்கியின் நிரந்தர பணியாளர்கள் அல்ல. அவர்கள் பணிவரன்முறைகளின் கீழ் அவர்களை இடமாற்றல் செய்வதும் தவறு. வங்கியில் நகைக்கடன் குறைவுக்கு அவர்கள் எந்த விதத்திலும் பொறுப்பாகமாட்டார்கள். இருப்பினும் நிர்வாகம் இந்த முடிவினை எடுத்துள்ளது.

இன்று நமது சங்க நிர்வாகிகள் **தோழர்.T.குமார்** அவர்களும், **தோழர்.S.மணிகண்டன்** அவர்களும் **தோழர்.B.ஜெயகுமார்** அவர்களும் மதுரை பிராந்திய மேலாளர் அவர்களைச் சந்தித்து மேற்கண்டவற்றை விளக்கிக்கூறினர். இருப்பினும், நிர்வாகம் தனது நிலையை மாற்றிக்கொள்ளவில்லை.

**மதுரை பிராந்திய நிர்வாகத்தின் தொழிலாளர் விரோத போக்கினைக் கண்டித்து இன்று மாலை 5.30 மணியளவில், மதுரை பிராந்திய அலுவலகம் முன்பாக நமது சங்கத் தோழர்களின் ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மதுரையிலுள்ள நமது தோழர்கள் அனைவரும் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றிகரமாக்கிட வேண்டுகிறோம்.**

தோழமை வாழ்த்துகளுடன்,

அ.சிதம்பரம்

(அ.சிதம்பரம்)
பொதுச் செயலாளர்